# விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் தமிழ்பேசும் சிறுபான்மை இனங்களின் அரசியல் நலன்களும்

வே. மணிவாசகர்

1978 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில், இலங்கையின் பிரதிநிதித்துவமுறை விகிதாசார அடிப்படையைப் பெற்றுள்ளது. இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து, குறிப்பாக, நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நடைமுறையிலிருந்துவந்த வெஸ்ட்மினிஸ்டர் மரபிலான எளிய பெரும்பான்மைத் தேர்தல்முறையிலிருந்து (simple majority system) புதியமுறை முற்றிலும் வேறுபடுகிறது. கட்சிகள் பெறுகின்ற வாக்குகளுக்கும், அவை பெறுகின்ற ஆசனங்களுக்குமிடையே, விகிதாசார ரீதியான ஒரு தொடர்பையேற்படுத்துவதன்மூலம், பிரதிநிதித்துவத்தின் ஜனநாயகப் பண்பினை மேலும் வலுப்படுத்த உதவுவதே புதிய முறையாகும். இக்கட்டுரை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ், தமிழ்பேசும் சிறுபான்மையினங்களின் அரசியல் ஆதாயங்களையும் இழப்புகளையும் ஆராயமுற்படுகிறது. தமிழ்பேசும் சிறுபான்மையினங்கள் எனும் தொடர், இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், தமிழ்பேசும் முஸ்லீம்கள் என்போரை உள்ளடக்குகிறது.

ஆரம்பம் முதல், இலங்கையில் அறிமுகமாகிவந்த ஒவ்வோர் பிரதிநிதித்துவ முறையும், ஜனநாயகப் பண்புகளைப் படிப்படியாக அபிவிருத்தி செய்து வந்துள்ளமை மறுக்கமுடியாததேயாகும். அதேவேளையில், அப்பிரதிநிதித்துவ முறைகள், இலங்கையின் முரண்பட்ட, பல்லின சமூகங்களின் வலியுறுத்தல்களையும், வேண்டுகோள்களையும் நிராகரிக்க முடியாமல், இன அடிப்படையிலான நலன்களை உள்ளடக்கவும், அதன் மூலம் இனவாத அரசியலுக்கு உந்துவிசையாக அமையவும் தவறவில்லை.[1] காலத்துக்குக் காலம், பிரதிநிதித்துவ முறைகளை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவும், சிறுபான்மையரின் பிரதிநிதித்துவ பலம் குன்றவும், அதன்மூலம் பெரும்பான்மையினரின் ஆதிக்க விஸ்தரிப்புக்கு உட்படவுமே ஏதுவாக இருந்துள்ளது சிறுபான்மையினரின் மனக்குறையாகும். அத்தகைய இன அடிப்படையிலான கண்ணோட்டத்திலிருந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் விடுபட முடியவில்லை.

1. See Kodikara, S. U. Communalism and Political Modernization in Ceylon. Modern Ceylon Studies, University of Peradeniya. Vol. 1, No. 1, 1970, p. 99; Mendis, G. C. The Rise of the Middle Class and the Beginnings of Communalism. Ceylon Today and Yesterday. Colombo, Lake House, 1963 pp. 132 - 35; Kearney, Robert N. Communalism and the Language in the Politics of Ceylon. Durham, Duke University Press, 1967. pp. 137 - 38

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ், தமிழ்பேசும் சிறுபான்மை இனங்களின் அரசியல் நலன்களைத் தெளிவாக அறியவேண்டுமானால், பழைய எளிய பெரும்பான்மை முறையில் அச் சிறுபான்மை இனங்கள் பெற்றிருந்த அரசியல் நலன்களை, புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் பெற முடியும் என எதிர்பார்க்கின்ற அரசியல் நலன்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதே சிறப்பான வழிமுறையாகும்.

இலங்கையின் பழைய பிரதிநிதித்துவ முறைகள் யாவும், ஒரு பன்மைச் சமூகத்தைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டவையாகும்.[2] இலங்கையின் சனத்தொகையில் சிங்களவர்கள் 74.0 வீதத்தையும், இலங்கைத் தமிழர்கள் 12.6 வீதத்தையும், இந்தியத் தமிழர்கள் 5.6 வீதத்தையும், முஸ்லீம்கள் 7.1 வீதத்தையும், ஏனையோர் 0.7 வீதத்தையும் உள்ளடக்குகின்றனர்.[3] பிரதிநிதித்துவ முறைகள் சனத்தொகை அடிப்படையுடன், பிரதேச அடிப்படையையும் கருத்திற்கொண்டே வகுக்கப்பட்டன. இதற்குக் காரணம் யாதெனில், வட, கிழக்கு மாகாணங்களில் செறிந்துவாழும் தமிழ் மக்களினதும், முஸ்லீம் மக்களினதும், மலையகத்தில் செறிந்துவாழும் இந்தியத் தமிழ்மக்களினதும் அரசியல் நலன்களைப் பேணுவதேயாகும்.[4] பிரதேச அடிப்படையில் 25 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதில் 13 தொகுதிகள் தமிழ் பேசும் சிறுபான்மையினங்களைச் சென்றடைந்தன. இதில் வட, கிழக்கு மாகாணங்கள் 8 தொகுதிகளையும், இந்தியத் தமிழர்கள் செறிந்துவாழும் ஊவா, சப்ரகமுவா மாகாணங்கள் 5 தொகுதிகளையும் பெற்றன. மிகுதியான 12 தொகுதிகளும் ஏனைய 5 மாகாணங்களுக்குப் பகிரப்பட்டன.[5] மேலும் பெரும்பான்மையினர்க்கு மத்தியில், கணிசமான தொகையினராக வாழும் சிறுபான்மையினர் தமது தனித்துவத்தையும், நலன்களையும் பேணும் விதத்தில் பிரதிநிதியொருவரைத் தெரிவு செய்யும் வகையில், பல அங்கத்தவர் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.[6]

இத்தகைய வாய்ப்பான நிலைமைகளால் சிறுபான்மையினர் தமது பிரதிநிதித்துவ பலத்தைப் பாதுகாக்க முடிந்தது. மறுபக்கத்தில் உள்ள அட்டவணை, பழைய பிரதிநிதித்துவ முறைகளில் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களில் பல்வேறு இனங்களின் பிரதிநிதித்துவ பலத்தை ஒப்பீட்டு ரீதியாக வெளிப்படுத்துகிறது.

---

2. For a discussion see Jacob, I. M. Constitutional Development and the Tamil Minority in Sri Lanka. South Asian Studies, 13 (2) 1978, pp. 66-71
3. Census of Population and Housing, Sri Lanka 1981. Colombo, Dept. of Census and Statistics, 1981. p. 2
4. Jennings, Ivor. The Constitution of Ceylon. O. U. P., 1953. pp. 213-14
5. Jennings, Ivor. op. cit., pp. 213 - 14
6. Ibid.

## அட்டவணை 1

### இன அடிப்படையில் 1947 - 77 தேர்தல் முடிவுகள்

| இனங்கள் | சிங்களவர் | இல. தமி. | இந். தமி. | முஸ்லீம். | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை ரீதியாக ஆசனங்கள் | 66 | 12 | 10 | 6 | 1 | 95 |
| பெற்ற ஆசனங்கள் 1947 | 68 | 13 | 7 | 6 | 1 | 95 |
| 1952 | 75 | 13 | 0 | 6 | 1 | 95 |
| 1956 | 75 | 12 | 0 | 7 | 1 | 95 |
| சனத்தொகை ரீதியாக ஆசனங்கள் | 106 | 17 | 18 | 10 | 0 | 151 |
| பெற்ற ஆசனங்கள் 1960 மார்ச் | 123 | 18 | 0 | 9 | 1 | 151 |
| 1960 யூலை | 121 | 18 | 0 | 11 | 1 | 151 |
| 1965 | 122 | 17 | 0 | 11 | 1 | 151 |
| 1970 | 123 | 19 | 0 | 8 | 1 | 151 |
| 1977 | 137 | 18 | 1 | 12 | 0 | 168 |

Source: Wilson, A. J. General Election in Sri Lanka 1947 - 77; de Silva, K. M. ed Universal Franchise; The Sri Lanka Experience. Colombo, Dept. of Information, 1981 p. 99

அட்டவணையை நோக்கும் போது, இலங்கைத் தமிழர்களும், முஸ்லீம்களும் தமது தொகைக்கேற்பவோ அல்லது மேலதிகமாகவோ தொகுதிகளைப் பெற்று வந்திருப்பது புலனாகிறது. அதே வேளையில், இந்தியத் தமிழர்கள் ஆரம்பத்திலேயே, அதாவது 1948 – 49 பிரஜாவுரிமைச் சட்டங்களினால் வாக்குரிமை இழக்க முன்பே, போதுமான பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை என்பதை அட்டவணை உணர்த்துகிறது. 1947 தேர்தலில், இந்தியத் தமிழ்மக்கள் மலையகத்தில், 7 தொகுதிகளை வெற்றி பெற்றும், 20 தொகுதிகளின் முடிவுகளைத் தீர்மானித்தும் பெரும் அரசியல் சக்தியாக விளங்கினர்.7 ஆனால், பிரஜாவுரிமைச் சட்டங்களின்பின் அவர்கள் ஒரு ஆசனத்தைக்கூடப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதனால், இந்தியத்தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் மேலதிகமாகச் சிங்கள மக்களைச் சென்றடைந்தது. இன்று இந்தியத் தமிழ்மக்கள் ஒரேயொரு பிரதிநிதியை மட்டும் தெரிவு செய்ய முடிகிறது. இப்பிரதிநிதித்துவம் அவர்களின் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது.

இவ்வாறு பழைய பிரதிநிதித்துவ முறைகளில் இலங்கைத் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அனுகூலமான நிலையும் இந்தியத் தமிழர்களுக்குப் பிரதியனுகூலமான நிலையும் காணப்பட்டபோதும், இம்மூன்று பகுதியினரையும், கூட்டு மொத்தமாகத் தமிழ்பேசும் சிறுபான்மையினர் எனும் ரீதியில் பார்க்கும்போது, அவர்கள் பாதிப்புற்றனர் என்றே கூறவேண்டும். ஏனெனில், 1947 தேர்தலில் மொத்தம் 95 ஆசனங்களில், சிங்களவர்கள் 58 ஆசனங்களையும், ஏனைய சிறுபான்மையினர் 37 ஆசனங்களையும் (15 தமிழர், 14 இந்தியத்தமிழர், 8 முஸ்லீம்கள்) பெறமுடியும் என சோல்பரி குழுவினர் எதிர்பார்த்தனர்.8 ஆனால், சிறுபான்மையினர் 26 ஆசனங்களையே பெறமுடிந்தது. இதனால் பெரும்பான்மையினருக்குப் போட்டியான பலம் கொண்ட ஒரு சிறுபான்மைக் குழுவாக அவர்கள் விளங்க முடியவில்லை. இந்தியத் தமிழர்கள் வாக்குரிமை இழந்ததிலிருந்து தொடர்ந்துவந்த தேர்தல்களில் நிலைமை மேலும் கேவலமாகியது. கடந்த தேர்தலில் தமிழ்பேசும் சிறுபான்மையினர் 45 ஆசனங்களைப் பெறக்கூடியவர்களாக இருந்தபோதும், 31 ஆசனங்களையே பெறமுடிந்தது. அதேவேளையில் 106 ஆசனங்களைப் பெறவேண்டிய சிங்களமக்கள் 137 ஆசனங்களைப் பெறக்கூடியதாயிற்று. இவ்வாறு பழைய பிரதிநிதித்துவ முறைகளில் சிறுபான்மையினர் தமக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற முடியாமையினால், தமது அரசியல் நலன்களையும் சிறப்பாகப் பேணமுடியாது போயிற்று. அதே வேளையில், பெரும்பான்மையினர் தமது பிரதிநிதித்துவத்தை விட மேலதிகமாகப் பெற்றமையால் சிறுபான்மையினரை அலட்சியப்படுத்தக் கூடியதாயிற்று.

---

7. Wilson, A. J. The Electoral Framework; Electoral Politics in An Emergent State. The Ceylon General Election of May 1970, Cambridge University Press, 1975 p. 49

8. Wilson, A. J. op. cit., p. 47

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ், சிறுபான்மையினரின் ஆசனங்களின் தொகை மேலும் வீழ்ச்சியடையக்கூடிய நிலைமைகளே உருவாகியுள்ளன. புதிய முறையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளரை மட்டும் கருத்திற்கொண்டு, பிரதேச அடிப்படையில் 36 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொரு மாகாணத்துக்கும் 4 ஆசனங்கள் வீதம் 9 மாகாணங்களுக்கும் சமமாகப் பகிரப்பட்டுள்ளன. இதனால் வடகிழக்கு மாகாணங்கள் முன்போல 8 ஆசனங்களைப் பெறும்போது, ஏனைய 7 மாகாணங்களும் 28 ஆசனங்களைப் பெறுகின்றன. இப்போது இந்தியத் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் மத்திய, ஊவா, சப்ரகமுவா மாகாணங்கள் அவர்களினால் பிரதிநிதித்துவம் செய்யப்படாமலே இருக்கின்றன. இதனால் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த சிங்கள மக்கள் வாழும் ஏனைய 7 மாகாணங்களும் தமது சனத்தொகைக்கு மிஞ்சிய வகையில் மேலதிக ஆசனங்களைப் பெறுகின்றன. அதேவேளையில், இலங்கைத் தமிழர்களும், முஸ்லீம்களும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழ்வதினால், கணிசமான அளவில் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுகிறது.[9] பழைய பிரதிநிதித்துவ முறைகளில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் 13 சதவீத சனத்தொகையைக்கொண்டிருந்தபோதும் பிரதேசரீதியாக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் 32 சதவீதத்தைப் பெற்றன.[10] புதிய முறையில் அது 22 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.[11]

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் புதிதாக மேலும் 28 தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பிரதேச அடிப்படையிலான 36 தொகுதிகளும், புதிய 28 தொகுதிகளும் நாட்டின் 22 மாவட்டங்களிடையே பகிரப்பட்டு, மொத்தம் 196 தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மறுபக்கத்திலுள்ள அட்டவணை மாவட்டரீதியாக புதிய தொகுதி ஒதுக்கீடுகளை விளக்குகிறது.

சிறுபான்மையினர் வாழும் மாவட்டங்கள் அதிக நன்மையைப் பெறவில்லை. புதிய தொகுதிகளாக, வன்னி மாவட்டம் இரண்டையும், மட்டக்களப்பு மாவட்டம் இரண்டையும், அம்பாறை மாவட்டம் இரண்டையும், திருகோணமலை மாவட்டம் ஒன்றையும் பெறும்போது வடக்குக் கிழக்கில் மொத்தம் 6 தொகுதிகளே அதிகரித்துள்ளன. இந்தியத் தமிழர்கள் அதிகமாக வாழும் கண்டி, வதுளை மாவட்டங்கள் ஒவ்வோர் தொகுதியை இழக்கும்போது நுவரேலியா மாவட்டம் ஒன்றைப் பெறுகிறது.

---

9. T. U. L. F. Leader's Speech delivered in the N. S. A. on 3rd August, 1978

10. de Silva, C. R, The Tamil Minority and the 1978 Constitution of Sri Lanka. Ceylon Studies Seminar, University of Peradeniya, 1978, Series No. 8, Serial No. 75, p. 5.

11. Ibid.

## அட்டவணை II

### விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாவட்ட ரீதியில் புதிய தொகுதி ஒதுக்கீடுகள்

| இல. | மாவட்டம் | வி. பி. முறையில் ஆசனங்கள் | பழைய முறையில் ஆசனங்கள் | புதிய ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 21 | 15 | 6 |
| 2 | கம்பஹா | 17 | 13 | 4 |
| 3 | களுத்துறை | 11 | 8 | 3 |
| 4 | கண்டி | 12 | 13 | –1 |
| 5 | மாத்தளை | 5 | 4 | 1 |
| 6 | நுவரெலியா | 6 | 4 | 2 |
| 7 | காலி | 11 | 10 | 1 |
| 8 | மாத்தறை | 9 | 7 | 2 |
| 9 | அம்பாந்தோட்டை | 7 | 4 | 3 |
| 10 | யாழ்ப்பாணம் | 11 | 11 | — |
| 11 | வன்னி | 5 | 3 | 2 |
| 12 | மட்டக்களப்பு | 4 | 3 | 1 |
| 13 | திகாமாதுல்ல | 6 | 4 | 2 |
| 14 | திருகோணமலை | 4 | 3 | 1 |
| 15 | குருநாகல் | 16 | 14 | 2 |
| 16 | புத்தளம் | 7 | 5 | 2 |
| 17 | அனுராதபுரம் | 7 | 7 | — |
| 18 | பொலநறுவை | 5 | 3 | 2 |
| 19 | வதுளை | 8 | 9 | –1 |
| 20 | மொனராகலை | 4 | 3 | 1 |
| 21 | இரத்தினபுரி | 10 | 8 | 2 |
| 22 | கேகாலை | 10 | 9 | 1 |

Source : Weekend, December 12, 1982, p. 1.

சமீபகாலங்களில் இடம்பெற்ற சில தேர்தல்களின் முடிவுகளை விகிதாசார அடிப்படையில் மதிப்பிடும்போது, எதிர்காலத்தில் சிறுபான்மையினர் தமது பிரதிநிதித்துவத்தைப் பெருக்கக்கூடிய நிலையில் இல்லை என்பது தெரிகிறது. 1970, 1977 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரு தேர்தல்களினதும் முடிவுகள், பழைய முறையின்கீழும், புதிய முறையின்கீழும் அட்டவணைகள் III, IV இல் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன.

## அட்டவணை III
புதிய — பழைய பிரதிநிதித்துவ முறையின்கீழ்
1970 தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | வாக்குகளின் வீதம் | பெற்ற ஆசனம் | பெற்ற ஆசன சத வீதம் | வி. பி. மு.யில் பெறக் கூடிய ஆசனங்கள் | வி. பி. மு.யில் பெறக் கூடிய ஆசனசதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய முன்னணி | 49·1% | 116 | 76·8% | 76 | 50·5% |
| ஐக்கிய தேசியக் கட்சி | 37·9% | 17 | 71·3% | 59 | 39·3% |
| தமிழரசுக் கட்சி | 4·9% | 13 | 8·6% | 10 | 6·6% |
| தமிழ் காங்கிரஸ் | 2·3% | 3% | 2·0% | 6 | 3·6% |
| சுயேச்சை | 6·0% | 2% | 1.3% | 0 | 0 0% |

Source : C. R. de Silva The Tamil Minority and the 1978 Constitution, op. cit., p. 8.

## அட்டவணை IV

### புதிய — பழைய பிரதிநிதித்துவ முறைகளின்கீழ் 1977 தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | வாக்குகளின் சதவீதம் | பெற்ற ஆசனம் | பெற்ற ஆசன சதவீதம் | வி. பி. மு.பில் பெறக் கூடிய ஆசனங்கள் | வி. பி. மு.பில் பெறக் கூடிய ஆசனசதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 50·0% | 140 | 83·3% | 92 | 54·5% |
| சுதந்திரக் கட்சி | 29 7% | 8 | 4·8% | 52 | 31·1% |
| இலங். ஐ முன்னணி | 6·8% | 0 | 0·0% | 8 | 4·6% |
| த. வி. கூட்டணி | 6·4% | 18 | 10·7% | 16 | 9·7% |
| சுயேச்சை | 5·0% | 1 | 0·5% | 0 | 0·0% |

Source : Same as Table III.

புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் மாவட்டமொன்றில், கட்சியொன்று, தொகுதியொன்றைப் பெறுவதற்கு, ஆகக் குறைந்தது, மொத்த வாக்கில் 12.5 சதவீதத்தையாவது பெறவேண்டும்.[12] இது மிகவும் உயர்ந்த எல்லையெனக் கண்டிக்கப்படுகிறது. பல நாடுகளில் இவ்வெல்லை 5 சதவீதமாகவே இருக்கிறது. இலங்கையில் கடைப்பிடிக்கப் படும் முறை, டீகொன்ட், தோமஸ் ஜெபர்சன் போன்ரோர் முன்வைத்த 'ஆகக் கூடுதலான சராசரிமுறை' (The Method oi Highest Average) என்பதாகும். பெல்ஜியம், பிரேசில், பின்லாந்து, ஆர்ஜன்டினு, இஸ்ரேல் போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் இம்முறை பல கட்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் எனவும், பெரிய தேசியக் கட்சிகளுக்கு உதவியாக அமையும் எனவும் கருதப்படுகிறது. ஆயின், தனித்துவமான

12. The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka. Colombo, Dept. of Govt. Printing 1978, p. 99 (5) a

அரசியல் இயக்கங்களையுடைய, பல்வேறு இனக்குழுக்கள் வாழும் நாட்டிற்கு, இது ஏற்றதல்லவென விமர்சிக்கப்படுகிறது.13 இம்முறை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி போன்ற சக்திவாய்ந்த பிரதேசக் கட்சிகள் மேலும் பலம்பெற வாய்ப்பளிக்கும் எனவும் நம்பப்படுகிறது.14 மேலும், இம்முறையானது, யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு எதிரான அணியும், கண்டி மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் தொகுதி ஒன்றைக் கைப்பற்றத் தடையாக அமையும் எனவும் கூறப்படுகிறது.15

சோல்பரி அரசியல் திட்டத்தில் அறிமுகமாகி, தொடர்ந்து நிலைத்து வந்த பல அங்கத்தவர் தொகுதி முறையையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை நீக்கியுள்ளது. இது சிறுபான்மையினரின் நலன்களைப் பாதிக்கக் கூடியதாகும். பெரும்பான்மையினருடன் வாழும் சிறுபான்மையினர், தமது நலன் பேணும் விதத்தில், தமது இனத்தவரைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யும் வாய்ப்பு புதியமுறையில் இல்லை. இருப்பினும் கண்டி, வதுளை. கொழும்பு மாவட்டங்களில், சிறுபான்மையினரின் சார்பாக நிறுத்தப் படும் அபேட்சகரின் வெற்றிவாய்ப்புக்குச் சாதகமான அறிகுறிகள் தென் படுகின்றன.16 பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி முறையின் நீக்கம் சிறுபான்மையினர் தேசிய அரசியலுடன் கலக்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கவும் உதவும் எனலாம்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் எக்கட்சியும் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மைப்பலம் பெறமுடியாத நிலையே உருவாகும். இதனால் அரசியல் திட்டங்களை அடிக்கடி மாற்றவோ அல்லது சிறுபான்மையினருக்கு விரோதமான சட்டங்களை இயற்றவோ, பாராளுமன்றம் பலம் கொண்டதாக இருக்காது. இதுவும் சிறுபான்மையினர் நலன்கள் பேணப்படுவதற்கு அனுகூலமான ஒரு நிலை எனலாம்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை கூட்டரசாங்கங்களின் உருவாக்கத்தையே தூண்டும் எனவும், தேசியக் கட்சிகளிடையே கடுமையான போட்டியேற்படும் போது சிறுபான்மையினரின் ஆதரவு, குறிப்பாகத்

13. Parliamentary series No. 14 of the second National State Assembly; Report from the select committee appointed to consider revision of the Constitution. Colombo, Dept. of Govt. Printing 1978. p. 171.

14. Wilson, A. J. The Gaullist System in Asia; The Constitution of Sri Lanka 1978, London, Macmillan Press, 1980, p. 91.

15. de Silva, C. R. The Representational System. The Ceylon Journal of Historical and Social Studies, VOL. VII, No. 2, June December, 1979. p. 27.

16. de Silva, C. R. The Tamil Minority And The 1978 Constitution, op. cit, p. 7.

தமிழ்மக்களின் ஆதரவு அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவைப்படலாம் எனவும், அதன்மூலம் தமிழ்மக்கள் வாய்ப்பான ஒரு நிலையில் இருப்பர் எனவும், ஊகிக்கப்படுகிறது. கடந்த சில தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே வாக்குகளின் தொகையடிப்படையில் நிலவிய கடுமையான போட்டியை மையமாக வைத்து நோக்கும்போது, இக்கருத்து மேலும் வலுவடைகிறது. பின்வரும் அட்டவணை அவ்வுண்மையைப் புலப்படுத்துகிறது.

### அட்டவணை V

### ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்குமிடையே நெருக்கமான போட்டியைத் தேர்தல்களில் வெளிப்படுத்தும் வாக்கு விபரங்கள்

| தேர்தல்கள் | கட்சிகள் | |
|---|---|---|
| | ஐ. தே. க. | சுத. கட்சி |
| *1960 மார்ச்* | *20·4%* | *20 9%* |
| *1960 யூலை* | *37·6%* | *33·6%* |
| *1965* | *39·3%* | *30·2%* |
| *1970* | *37·9%* | *36·9%* |

Source : Compiled from the Reports on the General Elections to the Parliament of Ceylon, Years : 1960, 1965, 1970 Colombo. Dept. of Govt. Printing.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் ஒற்றை மாற்று வாக்கின் அடிப்படையில் (Single Member Transferable Vote) நடைபெறும் ஜனதிபதித் தேர்தலில், சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் வெற்றிபெற முடியாவிட்டாலும், சிறுபான்மையினரின் வாக்குகள் தேர்தல் முடிவுகளை நிர்ணயிப்பதில் கணிசமான பாதிப்புச் செலுத்தமுடியும் என எதிர்பார்க்க முடியும். சிங்கள வேட்பாளர்களிடையே போட்டி இறுக்கமடையும்போது சிறுபான்மையினரின் வாக்குகளுக்கு. இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும் வல்லமை எற்படலாம். இதனுல் எதிர்காலங்களில், பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் நலனில் அக்கறை காட்டவும், தேசிய அரசியலில் சிறுபான்மையினரின் ஈடுபாடு அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் ஏற்படும்.[17] இத்தகைய போக்குகள் இனவாத அரசியலை ஓரளவில் மட்டுப்படுத்த உதவும் என எதிர்பார்க்கலாம்.

17. Wilson, A. J. General Elections in Sri Lanka 1947 - 77, p. 106; de Silva, C. R. The Representational System, p. 32.

தொகுத்துப் பார்க்கும் போது, இலங்கையின் பழைய பிரதிநிதித்துவ முறைகள் போலவே புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் குறைபாடுகளுடையதாகவே காணப்படுகிறது. பழைய பிரதிநிதித்துவ முறையில் இல்லாத சில அனுகூலங்கள் புதிய பிரதிநிதித்துவ முறையில் இடம் பெற்றிருக்கலாம். ஆயின் பழைய பிரதிநிதித்துவ முறையில் இருந்த சில அனுகூலங்கள், குறிப்பாகச் சிறுபான்மையினர் நலன் தொடர்பான அம்சங்கள், புதிய பிரதிநிதித்துவ முறையில் இடம்பெறவில்லை.

ஆரம்பம் முதல் இலங்கையில், பிரதிநிதித்துவ முறைகளின் வளர்ச்சியுடன் இணைந்த அம்சமாக, சிறுபான்மையினர் தமது பிரதிநிதித்துவ பலத்தைப் படிப்படியாக இழந்து வந்துள்ள நிலையை வெளிப்படையாகவே அவதானிக்க முடிகிறது. 1931 க்கு முன்பாக, சிறுபான்மையினங்களுக்கும் பெரும்பான்மையினமான சிங்கள இனத்துக்குமிடையிலான பிரதிநிதித்துவ பலம் 1:2 என்ற ரீதியில் காணப்பட்டது.[18] 1948 இன் பின் அது 1:3 ஆக மாறியது.[19] 1948 இன் பின் இவ்விகிதாசாரம் மேலும் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களே உருவாகியுள்ளன.

இலங்கையின் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியவர்களின் பிரதான நோக்கமாக, பாராளுமன்றத்தின் விருப்பு, வெறுப்புக்குக் கட்டுப்படாத உறுதியும், பலமும் வாய்ந்த ஓர் நிர்வாகத் துறையை உருவாக்குவதே இருந்துள்ளது.[20] பாராளுமன்றத்தின் அதிகாரங்களின் அழிவிலேயே, நிர்வாகத்துறைத் தலைவரான ஜனாதிபதியின் நிகரில்லாத அதிகாரங்கள் கட்டியெழுப்பப் பட்டுள்ளன. அரசியலமைப்புக்கு அடுத்தடுத்து அறிமுகப்படுத்தப்பட்டு வரும் திருத்தங்களாலும், பாராளுமன்றம் மேலும் பலவீனமடைந்து வருகிறது. ஜனாதிபதி சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் வல்லமை பெற்றிருப்பதும், பாராளுமன்றத் தேர்தல்களின் முக்கியத்துவத்தைப் பாதிக்கிறது. சமீபத்தில், பாராளுமன்றத் தேர்தலுக்கு ஒரு பிரதியீடு எனும் வகையில், சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் மூலம், பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பது கேலிக்குரியதாகிவிட்டது.[21] இத்தகைய நிலைமைகளின் பின்னனியில், விகிதாசாரப் பிரதிநிதித்துவமானது, எதிர்காலத்தில் தமிழ்பேசும் சிறுபான்மையினரின் அரசியல் நலன்களுக்கு ஏற்ற உத்தரவாதமாக அமையும் என எதிர்பார்க்க முடியாது.

18. Wriggins, Howard. The Constitutional Development of Ceylon; Dilemmas of a New Nation. Princeton University Press, 1960. p. 92

19. Ibid.

20. Jayawardena, J. R. Science and Politics; selected Speeches Colombo, 1974. p. 63

21. For detailed analysis see "Extending the Life of Parliament"; a pamphlet published by the Civil Rights Movement of Sri Lanka protesting at the haste to extend the life of Parliament. Colombo, October, 1982. pp 1 - 5.